# இராமநாதபுரத்தில் உலக தேனீ வளர்ப்பு தினம்

இராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக மண்டபம் வட்டாரம் வழுதூர் கிராமத்தில் உலக தேனீக்கள் தினம் 19.08.2017 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. இந்த தினத்தை முன்னிட்டு தேனீக்கள் வளர்ப்பு மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு என்ற ஒரு நாள் களப்பயிற்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர்.சி.இராஜமாணிக்கம் அவர்கள் தலைமை தாங்கி தேனீ வளர்ப்பதில் இளைஞர்கள் ஈடுபடுத்துதல், தரமான தேனுக்கு சந்தைப்படுத்துதல் மற்றும் தொழில்முனைவோருக்கான பயிற்சிகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். இந்த பயிற்சிக்கு இராமநாதபுரம் கடலோர உவர் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர்.ந.சாத்தையா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தேனீ வளர்ப்பு, தேனீக்களை கையாளுதல், தேனீக்களுக்கு உணவு மற்றும் தேன் எடுப்பபதில் உள்ள சிரமங்களைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

வேளாண்மை அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர் முனைவர்.ஜெ.இராம்குமார் அவர்கள் கூறும் போது தேனீக்களின் வகைகள், சுத்தமான தேன் எவ்வாறு அறிவது, எந்த தருணத்தில் தேன் எடுப்பது, தேனீ வளர்ப்பில் உள்ள சாதகமான அம்சங்கள் மற்றும் தேனீன் பயன்பாடுகள் அதன் சிறப்புப் பண்புகளைப் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறினார். இந்த நிகழ்ச்சியில் வழுதூர் கிராமத்தில் தேனீ வளர்ப்பு தொழில் முனைவோர் திரு.சிவா அவர்கள் கலந்து கொண்டு தேனீக்கள் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு பற்றிய அவரது அனுபவங்களை சக விவசாயிகளிடம் பகிர்ந்து கொண்டார். மேலும் தேனீக்களை எவ்வாறு வளர்ப்பது, கையாளுவது, தேன் எடுப்பது போன்ற செயல் விளக்ககளையும் சிவா அவர்கள் தனது தோட்டத்தில் செய்து காண்பித்தார். இந்நிகழ்ச்சியில் சுமார் 40 க்கும் மேற்பட்ட பண்ணை மகளிர்குழு உறுப்பினர்கள், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள். முடிவில் முனைவர்.ச.ஆரோக்கியமேரி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.